**செய்தி வெளியீடு** **நாள் : 9.5.2025**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்தும், திட்டங்களை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் கலந்தாலோசனைக் கூட்டம்**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (9.5.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் சிஎம்டிஏ சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்தும், திட்டங்களை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், தலைமைப் பொறியாளர்கள் (சிஎம்டிஏ) திரு.ப.மகாவிஷ்ணு, (உ.பொ.வ.துறை) திரு.வெங்கடேசன், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.மா.பாலமுருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate ™